Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதிவருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது,

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம்:—தாரணஹூ ஆடி மீ கஉஉ (1944 ஜூலை மீ 27 வியாழக்கிழமை) [இல கூக

# யுத்தம் நடக்கிறது

## இத்தலியப் போர்முனை

இத்தாலியிலிருந்து வெளியான நேச அறிக்கை கூறுவதாவது:- 5வது சேனையின் அமெரிக்கத் துருப்புகள் கடற்கரைப் பகுதியிலுள்ள மாரினுடின்பசாலை அடைந்து விட்டன. ஆர்னோ நதியின் தென்கரையில் நமது படைகள் பலமாக ஊன்றிக்கொண்டுவிட்டன. பிளாறென்ஸிற்கு 20 மைல் தூரத்திற்குள் நேசப்படைகள் இருக்கின்றன. டொரனுவா என்னும் நகரம் கைப்பற்றப்பட்டிருக்கிறது. நேச கனரக வெடிகுண்டு விமானங்கள் அலபேனியாவில் பீரெட்டிலுள்ள எண்ணெய் சுத்தஞ் செய்யுமிடத்தைத் தாக்கின.

## பர்மாப் போர்முனை

கண்டியிலிருந்து தென்கிழக்காசிய ராணுவபீட அறிக்கையொன்று கூறுவதாவது:- இம்பால் சமவெளியிலிருந்து கடைசி ஜப்பானிய கட்டுப்பாடான எதிர்ப்பு கோஷ்டியும் விரட்டப்பட்டு விட்டது. அரக்கானில் கடந்த மூன்று நாட்களாகப் பெரும்மழை பெய்து வருகிறது. ரோந்து நடவடிக்கைகளே இருந்தன. வடபர்மாவில மிட்கினுவில் நேசப்படைகள முன்னேறின.

## ருஷ்யப் போர்முனை

ருஷ்யர் புதிய வலுத்தாக்குதலொன்று ஆரம்பித்து பியாலிஸ்டாக் பிரஸட் லிட்டோவஸ்க ஆகிய இடங்களை நெருங்கி வருகின்றார்களென்று மாஸ்கோவிலிருந்து டன்கன் ஹூபெர் எழுதுகிறார். இப்புதிய ருஷ்யத்தாக்குதல வார்சாவையும கிழக்குப் பிரஷ்யாவையும கைப்பற ருஷ்யர் தயாராகும் வரை தொடர்ந்து நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரெஞ்சுப் போர்முனை

கேயனுக்குக் கிழக்கே ஆறுமைல் தூரத்திலுள்ள எடீவில்லே என்னும் கிராமத்தை நேசப்படைகள் கைப்பற்றிவிட்டன. மால்டாட்டிற்கு வடக்கே நதிக்கு மேற்கேயுள்ள ஜெர்மன் பாலமுனையில 200 ஜெர்மன வீரர்கள சிறைபிடிக்கப்பட்டனர். இதுவரை ஜெர்மனியர் நார்மண்டியில 53000 வீரர்களை இழந்திருக்கவேணடுமமென்று கருதப்படுகிறது.

## மன்னர்பிரான் இத்தாலிக்கு விஷயஞ் செய்தார்

லண்டன் யூலை 24—

மாட்சிமை தங்கிய ஆறும ஜோர்ஜ் மன்னர் இத்தாலிக்கு அங்குள்ள படைகளைப் பார்வையிடும் நோக்கமாக விஜயம் செய்தார். அவர் நேற்றுமாலை 5 மணிக்கு நேப்பிள்ஸ் நகரத்தை அடைந்தார். அங்கு மத்தியதரைக்கடற்படையின் பிரதம சேனாதிபதி அட்மிரல் சேர் ஜோன கனனிங்காம ஜெனறல சேர் ஹென்றி மெயிற்லனட் முதலியோர் மன்னர்பிரானை வரவேற்றனர்.

## குவாம்தீவில் அமெரிக்கர் முன்னேற்றம்

வாஷிங்டன் ஜூலை 24—

குவாம் தீவின் இருபக்கங்களிலும் அமெரிக்கத் துருப்புகள் திருப்திகரமாக முன்னேறி வருகின்றனவென்று அட்மிரல் நிமிட்ஸ் காரியாலய அறிக்கையொன்று கூறுகின்றது. குவாம் தீவில தென்பகுதியிலுள்ள அவிரான் குன்றை அமெரிக்கத்துருப்புகள் கைப்பற்றின. அகானுவிலிருந்து பிட்டி நகரத்திற்குச் செல்லும் எல்லா வடக்கு ரஸ்தாக்களும் அமெரிக்கர்வசமிருக்கின்றன.

## ஜேர்மனியின் நஷ்டங்கள்

மொஸ்கோ ஜூலை 25—

ருஷ்யருக்கு எதிராக நடந்தஜெர்மன் தாக்குதலில் ஒரு மாதத்துக்குள் 381000 ஜர்மனியர் கொலலப்பட்டனரென றும் 158,430 ஜர்மனியர் கைதுசெல்யப்பட்டனரென்றும் உத்தியோகஸ்தாபனையில் அறிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட்டோருள் 22 பேர் சேனாதிபதிகள். ஜர்மனியரது 2735 டாங்கிகளும் 8742 பீரங்கிகளும் நாசமாக்கப்பட்டனவாம்.

## ஸ்கோவ் நகர் பிடிபட்டது 94 ஜெர்மன் டாங்கிகள் நாசம்

மாஸ்கோ யூலை 23—

ஸ்கோவ் நகரம் கைப்பற்றப்பட்டதாகவும ஜெர்மனியர்களிடமிருந்து இறுதியாக விடுவிக்கப்பட்ட கடைசி ருஷ்ய நகரம் இதுதான் என்றும் ஸ்டாலின் அறிவிக்கின்றார். லட்விய எஸ்டோனிய எல்லைப் புறத்தில் இந்த நகரம் ஒரு காவல் நகர்போல இருக்கிறது. இது வீழ்ச்சியடைந்ததனால் பால்டிக் பகுதியில சோவியத வலுத்தாக்குதலொன்று ஆரம்பமாக இடமிருக்கிறது. கிழக்குப் பிரஷ்யாவின் வட்எல்லைப்புறத்திலுள்ள பாதுகாப்புகளை இப்போது ருஷ்ய சேனைகள் தகர்த்துக் கொண்டிருக்கின்றனவென்று ராய்ட்டரின விசேஷ நிருபர் மாஸ்கோவிலிருந்து அறிவிக்கின்றார்.

ருஷ்யத் துருப்புகள் தொடர்ந்து வலுத்தாக்குதல் நடத்திப் பல இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனவென்றும் லுப்ளின் நகருக்குள் பிரவேசித்துவிட்டனவென்றும் சோவியத அறிக்கை ஒன்று கூறுகிறது.

## தமிழர் காங்கிரஸ் கூடுகின்றன

அகில இலங்கைத தமிழர் காங்கிரஸ் ஒன்று கூடுவதுபற்றி ஆலோசனை செய்வதற்காக ஒருகூட்டம் சகிரா கல்லூரி மண்டபத்தில நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு திரு. G.G. பொன்னம்பலமவர்கள தலைமை வகித்தார். Dr. E M. V. நாகநாதன் காரியதரிசியாகக்கடமையாற்றினார். அந்தக கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள கொண்டு வரப்பட்டன. அவற்றுள் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற தீர்மானமே முக்கியமானது.

## சென்னையில் கோர தீவிபத்து

சென்னை யூலை 20—

புதன்கிழமை மாலை மவுண்ட் ரோடுபோஸ்டு காரியாலயத்துக்கு எதிரிலுள்ள இந்தியன் மியூசுவல் லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி கட்டிடத்தில் கோரமான தீ விபத்து ஏற்பட்டது. இதனால் ஆட்சேதம் ஒன்றும் ஏற்படவில்லை. பல லட்சம் ரூபாய் அளவுக்கு பொருட்சேதம் ஏற்பட்டிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. தீ விபத்திக்குக் காரணம் தெரியவில்லை.

## ரயில் பிரயாணியிடமிருந்து ரூபாய் 4675 திருட்டு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் புகைரதவண்டியில் முதலாவது வகுப்பில திரு. எஸ். வைத்திலிங்கமென்பவர் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் அவரிடமிருந்த ரொக்கம ரூபாய் 4675 களவுபோய்விட்டது. அவர் அநுராதபுரத்துக்குப் பிரயாணம் செய்தாரெனவும் இடையில மதவாச்சியில் அவரிடமிருந்த பணம முழுவதும் திருடப்பட்டுவிட்டதாகவும தெரிகிறது.

## சீக்கிரம் யுத்தம் முடியலாம்

லண்டன், யூலை 23

நார்மண்டியிலுள்ள ஆர். ஏ. எப். விமானிகளுக்கு பேசுகையில பிரதமமந்திரி திரு. வின்ஸ்டன் சர்ச்சில் இனறு பின்வருமாறு கூறினார்.

ஜெர்மனியில் பலவீனத்துக்கான பயங்கர அறிகுறிகள் தென்படுகின்றன. அங்கு பெரிய குழப்பமான நிலைமை இருந்து வருகிறது. அங்கிருக்கும் சலவரமான நிலைமையை எவராலும அளவிட்டுச் சொல்ல முடியாது.

ஜெர்மானியர்கள் ஒருவர்க்கொருவர் சுட்டுக்கொள்கிறார்கள். நாம் எதிர்பார்ப்பதைவிடத துரிதமாக யுத்தம முடிவுக்கு வரலாமென்று தெரிகிறது.

## யாழ்ப்பாணக் கல்லூரியில் சுகாதார விழா

பொதுசன பாதுகாப்பாளரும் உணவு அதிகாரியுமான சேர். ஒலிவர் குணதிலகாவின் வரவேற்புக் காரணமாக, ஐக்கிய, கிருஷிக உணவுவிருத்தி, கைத்தொழில். சுகாதாரக் காட்சிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில ஆடி மீ 28-ம, 29-ம, திகதிகளில (வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை) நடைபெறும்.

## கீல்மீதுபலத்தகுண்டுவீச்சு

லண்டன் யூலை24

பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள நேற்றிரவு கீல்நகரத்தைத் தாக்கின. 2500 டன வெடி குண்டுகள் வீசப்பட்டன. இத் தாக்குதலில் ஜேர்மனியின் ஆயுதக் கப்பலொன்றும் ஜேர்மனியப் பட்டணமொன்றில் எண்ணெய் எப்வும் ஜெஷ்டத்திற்கு 1,600 டன் வெடிகுண்டுகள வீசப்பட்டன.

## குற்றம் அதிகரிப்பு

### மந்திரி சபையின் உத்தேசம்

கடந்த இரு வருடங்களில் இலங்கையில் குற்றங்கள் மிக அதிகரித்திருப்பதற்கான காரணங்களையும், பொலிஸ்படையின் வேலைமுறையையும் பரிசீலனை செய்வதற்கும் குற்றங்கள் அதிகரிப்பதைத் தடுப்பதற்கு ஆலோசனைகளை வகுப்பதற்குமாக மந்திரிசபை ஒரு கமிஷனை நியமிக்க உத்தேசித் திருக்கிறதென்று அறியப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமையன்று அரசாங்கசபை முதல்வர் வரவு செலவுத்திட்டத்தை சபையில் சமர்ப்பித்துப் பேசுகையில் 1943-ம் வருடத்தில நடைபெற்றுள்ள அளவு குற்றங்கள் இதற்குமுன்னர் என்றுமே நடைபெறறதில்லை யென்றும் 1942ம வருடத்தில் நடைபெற்ற குற்றச்செயல்களைக் காட்டிலும் 1943ம் வருடத்தில் ஏறக்குறைய 600 குற்றங்கள் கூடுதலாக நடைபெற்றிருக்கின்றனவென்றும் கூறினார்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

நிகழும் தாரணவருஷம் ஆடி மீ 13ம் திகதி (28-7-44) வெள்ளிக்கிழமையன்று வழமைபோல யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை நடைபெறும. முற்பகல் 10—10½ மணிவரை கடவுள் வழிபாடு, 10½ தொடக்கம் 12மணிவரை பெரியபுராணம் வெள்ளானைச்சருக்கம் படித்துப் பயன் சொலலல் 12 தொடக்கம் 2 மணி வரை மாகேசுவரபூசை.

## நூரளை உபதேர்தல்

அரசாங்கசபை நூரளை ஸ்தானத்துக்காக நடைபெற்ற உபதேர்தலில் கண்டிமேயரான திரு. டபிள்யூ ஏ. பி. சொய்சா வெற்றிபெற்றார். அவருக்கு 2487 அதிகப்படியான வாக்குகள் கிடைத்தன. தேர்தலின் முடிவு பின்வருமாறு:-

திரு. டபிள்யூ. ஏ. பி. சொய்ஸா 13151.

திரு. எம். சுப்பையா—10664.

திரு. ஏ. சுப்பையா —531

சொய்ஸாவுடன் இரண்டு தமிழ் அபேட்சகர்கள் போட்டிபோட்டார்கள்.

## லுப்ளின் நகரம் வீழ்ச்சி அடைந்தது

முதலாவது வெள்ளை ருஷ்யப் போர்முனையைச் சேர்ந்த ருஷ்யத் துருப்புகள் லுப்ளினைக் கைப்பற்றின. 500 கிராமங்களுக்குமேல் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

பிரஸ்ட்லிடோவ்ஸ்க் - வார்சா ரயில் பாதையை ருஷ்யத் துருப்புகள் துண்டித்துவிட்டன. குறும்பனிற்கு மேற்கிலும் தென்மேற்கிலும் ருஷ்யத் துருப்புகள் முன்னேறி 150 கிராமங்களுக்கு மேல் கைப்பற்றியிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண௵
ஆடி௴ கஉ௳ வியாழக்கிழமை

## சுகாதார வாரம்

முந்திய வருடங்களிற் சுகாதாரத்திற்குரிய பேச்சுக்களும், பேச்சிற்குரிய முயற்சிகளும் பெரும்பாலும் வித்தியாசாலைகளில் ஒரு வார காலத்திற்கு நடந்து வந்தமையினால் அந்த வாரம் சுகாதார வாரம் என்னுங் காரணப் பெயரைப் பெற்று வழங்கலாயிற்று; ஆனால், இப்பொழுது இரண்டு மூன்று தினங்களுக்குச் சுகாதாரப் பேச்சும் முயற்சிகளும் நிகழ்கின்றனவாயினும் பழைய சுகாதாரவார மென்ற பெயரே கொடுத்து வழங்கப் படலாயிற்று. இச் சுகாதார வாரத்திலே வித்தியா பகுதியார், வித்தியாசாலைகளிலுள்ள உபாத்தியாயர்கள், மாணாக்கர், வைத்தியப் பகுதியார் இன்னும் அரசாங்க உத்தியோகத்தர் முதலிய பலர் சம்பந்தப்பட்டு இதனை நடத்துகின்றார்கள். இவர்களுடைய நோக்கமும் முயற்சியும் நல்லன என்றே மதிக்கத்தக்கன. ஆனால், மக்களுடைய சுகாதாரத்திற்கு முழுவதும் பிரதிகூலமான இந்த யுத்த காலத்திலே, யுத்த காரணமாக நேர்ந்த உணவுப்பொருள் உடைப் பொருட் பஞ்ச காலத்திலே, மேலே சொல்லப்பட்டவர்கள் செய்யும் சுகாதார வார முயற்சியினால் ஏதும் நன்மையுண்டோ என்பது தான் ஆசங்கைக்கிடமாகும். மக்களுடைய சுகத்திற்கு ஆகாரத்தைத் தேட வேண்டிய முறை வேறு, இப்பொழுது இவர்கள் செய்யும் முறை வேறு என்பதையே நாம் ஈங்கே எடுத்துக் காட்டுகின்றோம். பொருள் விலைக் கட்டுப்பாடு நடைபெறும் இக்காலத்திலே சனங்களுக்கு உதவப்படும் உணவுப் பொருள்களின் நன்மை யென்னை யென்பதைச் சுகாதாரத்தில் இடம்பட்டு உழைப்பவர் பார்க்க வேண்டும்; சில காலங்களாக "கூப்பன்" கடைகளிலும் சங்கக் கடைகளிலும் உதவப்படும் அரிசி உட்கொள்ளத்தகாதனவாயும் சத்தில்லாதனவாயும் மண் கல் முதலிய கூடியனவாயும் காணப்படுகின்றன; கறிக்குரிய வெஞ்சனங்களும் மேலே சொல்லப்பட்டனவாகக் காணப்படுகின்றன வல்லவா. சென்ற வாரம் கூப்பன் கடையிலே உதவப்பட்ட புளி சகுப்பிடித்து உளுத்துச் சத்துக் கெட்டு ஒரு வாட்டியன் நிலைமையடைந்தாகக் காணப்பட்டதே; இந்த நிலைகெட்ட புளியைக் கூறி முதலிய வற்றிற் சேர்த்து உண்டால், உண்டவரின் சுகாதாரம் என்னவாய் முடியும்?

இனி, சுகாதாரத்திற் குரியதாகிய நல்லெண்ணெய், கடலை யெண்ணெயோடு கலந்து விற்கப்படுகின்றதென்று சனங்கள் முறைப்படுகின்றார்கள்; இப்படிக் கலக்கப்பட்ட எண்ணெயைத் தலையில் இடுவதால், இட்டு முழுகுவதால் சுகாதார முண்டாகுமா? இந்தக் கலப்பைக் கண்டுபிடித்து கலந்து விற்போரைக் கண்டித்து, சுத்தமான எண்ணெயையே சனங்கள் வாங்கி உபயோகிக்கச் செய்த லல்லவா சுகாதாரத்திற்கு வழிதேடுவதாகும். மேலும், நல்லெண்ணெய் இப்பொழுது என்ன விலை விற்கின்றது? போத்தல் மூன்று ரூபா வரையில் இப்பொழுது இவ்வீக விலைப்படுகின்றதல்லவா? சுகாதாரத்திற்கு இன்றியமையாததாகிய நல்லெண்ணெய் இப்படி அநியாய விலை விற்கப்படுமானால், ஏழை மக்கள் இதனை வாங்கித் தலையில் இட்டு முழுகிச் சுகாதாரத்தோடு வாழ்வதெப்படி? இதன் விலையைக் கட்டுப்படுத்துவது சுகாதாரத்திற்குப் பிரதானமான ஏதுவாகுமல்லவா?

இவை மாத்திரமா? சுகாதாரக் கூட்டங்களிற் சமுகஞ் செய்த பிள்ளைகளுள் எத்தனை பேர் ஊத்தைத் துணி கட்டியிருக்கக் கண்டோம்! எத்தனை பிள்ளைகள் குளித்தபின் அழுக்குத் துணியைக் கட்ட வேண்டுமென்ற காரணம் பற்றிக் குளியாமல் முழுகாமல் வந்ததைக் கண்டோம். எத்தனை பிள்ளைகள் சீவாதாரத்திற்கு ஏதுவாகிய போதிய உணவு இல்லாமையினால், சபையிலே பாடவும் பேசவும் சத்தியில்லாமற் சோர்வதைக் கண்டோம். இவை மாத்திரமா, இல்லை, இன்னுஞ் சில உண்டு; சுகாதார வாரம் நடக்கும்போது இந்தப் பட்டினத்திலுள்ள தெருக்கள் கான்கள் ஒழுங்கைகள் கிடந்த கிடையென்ன? இப்பொழுதும் கிடக்குங் கிடையென்னை; எங்கே பார்த்தாலும் குப்பை, மனுஷமலம், நாய் மலம், அழுக்கு, உடைந்த போத்த லோடு, பீங்கானோடு முதலியன செறிந்து காணப்படுகின்றனவே; இவைகளெல்லாம் சுகத்திற்கு ஆதாரமானவைகளா? உட்சுவர் அழுக்கோடிருக்க, புறச்சுவரை பாத்திரம் பூசி விடுவதனால் வரும் நன்மை ஏதுமுண்டா?

இந்தச் சுகாதார வார நேரத்திலே டாக்டர். S. F. செலப்பா என்ன தெரிவிக்கின்றாரென்று பார்ப்போம். சென்ற 1942-ம் ஆண்டைக் காட்டிலும் 1943-ம் ஆண்டில் மரணமானோர் தொகை 19083 அதிகப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கின்றார்; இதற்குக் காரணம் சுகாதாரத்திற்குச் சீவாதாரத்துக்குமாகிய உணவு குறைந்தமையே என்றுந் தெரிவிக்கின்றார். இப்படிச் செல்லரிசிக் குறைவும் உணவுப் பொருட் பஞ்சமுமே இப்பொழுது இருத்தல் போல ஆனாலும் ஏற்பட்டிருக்கு மேருமானால் இவற்றால் வரக்கூடிய தீமை பயங்கரமாகுமென்றும் குறித்த டாக்டர் தெரிவிக்கின்றார். ஆனதால சுகாதார விஷயமாக உழைக்க முற்பட்டு நிற்பவர்கள் இந் நாட்டு மக்களில் இந்தக் காலத்தற்காகிய சுகாதாரமான முயற்சிகள் எவை யென்பதை உணர்ந்து உழைப்பாரேல் நன்மையுண்டாம்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—11)

**என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?**

வீராசாமி கல்வியறிவில்லாதவனாயினும் இயல்பிலே நல்லவன்; வஞ்சனை சூது செய்ய அறியான்; இந்தஇருவரைக்காட்டிலும் அவன் உலக அநுபவமுடையவன்; மதுபானஞ் செய்துகொண்டானேயானால் வீராசாமியைக் கொண்டு எதுவுஞ் செய்வித்தல் முடியும்; இந்த இரகசியத்தையுணர்ந்த பாலசிங்கன் வீராசாமிக்குக் குடிவகை வாங்கிக் குடிக்கச் செய்துவிட்டு அவனைச் சூத்திரப் பாவைபோல் வைத்து ஆட்டுவான். "வெறியில்லாமற் சுயகுணத்துடன் இவன் இருக்கும் இந்த வேளையில் என் கருத்திற்கு இவன் இசையான்" என்று நிச்சயித்துக் கொண்டு "வீராசாமி, வருகிறாயா உந்தப்பக்கமாகச் சும்மா போய்வாம்" என்று பாலசிங்கன் கேட்க "ஓம்" என்று உடன்பட்டு எழுந்தான் வீராசாமி; பாலசிங்கன் சொற்ப பணத்தையும் எடுத்து மடியுள் வைத்துக்கொண்டு வீராசாமியுடன் புறப்பட்டு மெல்ல மெல்ல மதுபானக் கடைக்கு அவனைக் கூட்டிக்கொண்டு போய்த் தானுங் குடித்து அவனையும் நிறையக் குடிக்கச் செய்தான்; அதன் பின்னர் அவனைக் கடற்கரைக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவனுடன் தானும் கடற்கரை மணலின்மீது இருந்தான்; அப்பொழுது நேரம் பிற்பகல் ஐந்து ஐந்தரை மணிவரையிலிருக்கும்; பாலசிங்கன் பக்கத்தே இருந்த வீராசாமியைப் பார்த்து "வீரா, விசுவநாதனை விசாலாட்சியும் அவனுடைய மாமன்வீட்டுக் காரரும் வெறுக்கச் செய்யவேண்டும்; அதற்கு இப்பொழுதே ஏதும் சூழ்ச்சி தேடவேணும்; உன்னால் ஏதும் உபாயஞ் சொல்லமுடியுமா" என்று மெல்லக் கேட்டான்; "அடா, பாலா, நீதான் அவனை அந்தப்பெண்ணும் அவளுடைய பெற்றோரும் வெறுக்கும் படியாகச் செய்துவிட்டாயே; வெறுக்கப்பட்டவனைப் பிறகும் வெறுக்கச் செய்வது எப்படியடா" என்றான் வீராசாமி; "அப்படியல்லவெடா, அந்தப் பெண் அவனையே கல்யாணஞ் செய்ய வேண்டுமாம்; இல்லையேல் தான் கல்யாணஞ் செய்வதில்லையென்று பிடிவாதமாக நிற்கின்றாளாம்; அதற்காகத்தான் சொல்லுகின்றேன், இந்தக்கருமத்தில் நீ எனக்கு உன்னால் இயன்ற உதவி செய்யவேண்டும்" என்று சொல்லியிருந்தான்; "அது சரி பாலா, அவள் அவனைக் கல்யாணஞ் செய்தாலென்ன, அவளை அவன் கல்யாணஞ் செய்தாலென்ன, அந்தக் கல்யாணந்தான் நடவாமற்போனாலென்ன; நீ ஏன் அந்த விஷயமாக ஆத்திரப்படுகிறாய்? நான்முந்தியுஞ் சொன்னேன் அந்தப் பெண்ணை நீ கல்யாணஞ் செய்ய முடியாது; பயனில்லாதகருமத்திலே தலையிட்டுக் கொண்டு ஏனடா சங்கடப்படுகிறாய்" என்று தடுத்துச் சொன்னான் வீராசாமி; "என் சிநேகிதா, அந்த ஒரு விஷயத்தில்மாத்திரம் என்னை நியாயங் கேளாதே, என்னை உனக்கு வேணுமானால் எனக்கு உதவி செய்" என மீளவும் அவனை இரந்தான் பாலசிங்கன். "சரி எனக்கு உபாயந் தெரியாது; உபாயத்தை நீயே யோசித்துச் சொல்லு; சொல்வதைச் செய்கிறேன்; இதனால் பின்னுக்கு உனக்கும் எனக்கும் ஏதும் அபாயம் வந்தால், உனக்காக நான் அதனையும் அனுபவிக்கிறேன்; நீ என்னைக் குற்றஞ் சொல்லாதே" சரி, இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்" என்று வெறுப்புடன் கேட்டான் வீராசாமி; பாலசிங்கன் சொல்லுகிறேன் என்று கூறிச் சிறிதுநேரம் யோசித்தான். "சிநேகிதா, சிலநாட்களாக விசுவநாதன் எங்களிடம் வராமல் விட்டது மாத்திரமல்லாமல் என்கண்ணிலும் உன்கண்ணிலும் எதிர்ப்படாமல் ஒதுங்கித் திரிகின்றானே; அவனுக்கு என்மேல் அவநம்பிக்கை பிறந்துவிட்டது; குடிவகை கொடுத்து அவனை இனி என் வசப்படுத்தமுடியாது; அதற்கு வேறு ஏதும் உபாயம் நான் யோசிக்கிறேன்; நீ அவனுக்குச் சொல்லாமல் அவனை ஏதோ ஒரு உபாயத்தினாலே என்னைச் சந்திக்கச் செய்யமாட்டாயா" என்று பாலசிங்கன் கேட்க, "உபாயம் சூழ்ச்சி வஞ்சகஞ் சூது ஒன்றும் எனக்குத் தெரியாது என்று முந்தியே உனக்குச் சொல்லிவிட்டேனே; அவனை உன்னோடு சந்திக்கச் செய்வதற்கு ஒரு உபாயத்தை நீயே எனக்குச் சொல்லித்தந்தால் நான் அப்படியே செய்கிறேன்" என்றான் வீராசாமி; நல்லது, இன்றைக்கு வேண்டாம்; நாளைப்பின்னேரம் நான் என்வீட்டிலேயே படுத்திருக்கிறேன்; நீ அவனிடம்போய் எனக்கு ஆபத்தான சுகவீனம் சடுதியில் வந்ததென்று சொல்லி அவன் மனத்தை என்விஷயமாக இரங்கச்செய்து என்வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வா; அதன் பிறகு ஆகவேண்டியவைகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றான் பாலசிங்கன்; "என்னடா பாலா, நீ நலமாகவே இருந்துகொண்டு உனக்கு ஆபத்தான வருத்தமென்று அவனுக்குப் பொய்சொல்லி அவனை ஏமாற்றிக் கூட்டிக்கொண்டுவரச் சொல்லுகிறாய்; என்ன சுகவீனமென்று அவன் கேட்டால் உனக்குப் பேதி நோய் கண்டதென்று நான் அவனுக்குச் சொல்லுவதா? சரி பார்ப்போம்; வாய்த்தாற் கண்டுகொள்; இல்லாவிட்டால் என்னைக் குறை சொல்லாதே" என்றான் வீராசாமி; இருவரும் பின்னரும் சிலநேரம் கடற்கரையிலிருந்தே இருந்துவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு மீண்டு மதுபானக் கடைக்குப் போய்க் குடித்தார்கள். வெறியேறியவுடனே வீராசாமி, "அடே மச்சான், நீ சொன்னதெல்லாம நான் உனக்காக இனிச் செய்வேனடா" என்று சத்தமிட்டான், அன்று இருவரும் தத்தம் வீட்டிற்கு மீண்டனர். அடுத்தநாட் பின்னேரம், சங்கேதப்படி வீராசாமி விசுவநாதன் வீட்டிற்கு அவன் அங்கேயிருக்குஞ் சமயம் பார்த்துப் போய்ச் சேர்ந்தான்; வீராசாமி தன் வீட்டிற்கு வருவானென்று எண்ணஞ் சிறிதும் இல்லாத விசுவநாதன் அவனைக் கண்ட மாத்திரத்தே துடுக்குற்றானெனினும் அதனைப் புறத்தே காட்டாது "வா", என வீடுதேடி வந்தவனை உபசரிக்கவேண்டுமென்ற முறை

தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவத்தியானம்

(இணுவை வை, அகவரதவிநாயகமூர்த்தி)

எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவியே மேலானது. இதனை நோக்கியன்றே, “அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்ற ஔவைப்பிராட்டியாரது திருவாக்கு எழுந்ததுபோலும். முற்பிறவிகளில் செய்த புண்ணியங்களின் பயனாகவே ஒருவன் மானிடப்பிறவி வாய்க்கப்பெறுகிறானென்று நமது சமய சாத்திரங்கள் எடுத்துக்கூறும். இத்தகைய பிறவியைப்பெற்றும் அதனால் எய்தற்பாலதாகிய உயரிய பயனை அடையாது பிறந்து இறந்து உழலுபவரே பெரும்பாலாராவர். உயிர்வாழ உண்பதும், உண்டு உயிர்வாழ்வதும், ஐம்பொறிகளாலாய இன்பம் நுகர்வதுமே எங்களிற் பெரும்பாலாரது வாழ்க்கை நெறியாகும். இவ்வாறு உண்டு உறங்கி உயிர்வாழ்ந்து காலமென்னும் கரையிலா மணற்பரப்பிலே காலடியைப் பதியாது வறிதே காலங்கழித்த எங்களது வாழ்க்கை பயனற்றதன்றோ. அரிதிற் பெற்றெடுத்த மானிடதேகத்தைக் கொண்டு நாங்கள் செய்யவேண்டிய சேவைகள் பலவுள. திரிகரணங்களாலேயே நாங்கள் பல தொழில்களையும் செய்கின்றோம். திரிகரணங்கள் என்பது மனம் வாக்கு காயம் என்ற மூன்றையுமே குறிக்கும். எங்களுடைய தொழில்கள் செவ்வனே செய்யப்படுதற்கு எல்லாவற்றிலும் மேலாய்த் திரிகரணசுத்தி அத்தியாவசியமாகும்.

திரிகரணசுத்தியென்பது, மனம் வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் நாம் செய்யும் செய்கைகள் சுத்தமானவைகளாய் அதாவது குற்றமற்றவைகளாய் இருக்கவேண்டும் என்றும், மூன்றும் ஒருமித்தே ஒன்றைச் செய்யவேண்டுமென்றும் பொருள் தருகிறது. நாம் செய்யும் ஒவ்வொரு செய்கைக்கும் இவைமூன்றும் காரணமாயிருக்கின்றன. முதல் முதல் மனதால் ஒன்றைச் சிந்திக்கின்றோம்; பிறகு வாக்கால் அச்சிந்தனையை வெளியிடுகிறோம்; அதன்பிறகு காயத்தால் அதைச் செய்கின்றோம். நமது செய்கைகளுக்கு இவைமூன்றும் காரணமாயிருப்பதால் நாம் சேகரிக்கும் புண்ணிய பாவங்களுக்கு இவைகளே காரணமாகின்றன. ஆயினும் எந்தச் செய்கைகளுக்கும் ஆதியாய் வேண்டிய சிந்தனை உதிக்குமிடம் மனமே. ஆகையால் மனமே முதற்காரணமாயிருக்கின்றது. அதனால் முதலாவதாய் மனம் சுத்தமாயிருத்தல் வேண்டும். செம்பிலிருக்கும் களிம்பை நீக்கத் துலக்குதற்கு நாங்கள் புளிமுதலிய பதார்த்தங்களை உபயோகிக்கின்றோம். அதேபோன்று எங்களுடைய மனத்திலிருக்கும் மாசு நீங்கி மகிழ்வெய்தற்குச் சிவத்தியானமே ஓர் சிறந்த சாதனமாகும். சர்வ வியாபகமாய் ஒருபரம்பொருள் இருக்கின்றதென்பதும் அவரைத்தேடியடைந்து அவர்மயமாவதே பேரின்பம் பெறுவதற்குரிய பெறற்கரும் வழியென்பதும் எம்மத்தனருக்கும் சம்மதமான ஓர் கொள்கையாகும். மனம் பூரணநிலை அடையும்வரையும் ஏதாவதொன்றை எண்ணியபடியே இருக்கும். இதை நாங்கள் ஒவ்வொருவரும் அனுபவத்திற் கண்டிருக்கின்றோம்.

சிவத்தியானத்துக்கு மன அடக்கமே மிகவும் முக்கியமானது. மனதிற்கு அடிமைப்பட்டு அதன்போக்கின்படி விடக்கூடாது. மனத்தை அடக்குவது சுலபமான காரியமல்ல. ஒருவன் மனத்தை அடக்கி பழகிக்கொண்டு வருவானாயின் நாளடைவில் அவன் எக்காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பான். அஞ்ஞான அந்தகாரத்துள் அமிழ்ந்திருப்பவர்கள் அவ்விருளையகற்றி ஞானத்தை அடைவதற்குச் சிவத்தியானத்தைப் போன்றவழி பிறிதொன்றில்லை. சிவத்தியானமென்ற திவ்வியபயிர் மனமென்னும்வயலிலே செழித்தோங்கி வளர்வதற்கு பொறாமை, வெகுளி முதலிய களைகள் அவ்வயலினின்றும் அகற்றப்படுதல் அவசியம். துர்க்குணங்களைப் போக்குதற்கு சிவத்தியானம் இன்றியமையாதது. அழியும் பொருட்களில் ஆசைவைத்து அவைகளையே அல்லும் பகலும் அடையவேண்டுமென்னும் அற்ப சிந்தையுடையவனுக்குச் சிவத்தியானத்தாலடையப்பெறும் திவ்விய கதி ஒருபொழுதுங் கிடையாது. மனத்தின் தன்மைபோலாகவே எங்களுடைய வாழ்வும் இருக்குமென்பது நாங்கள் சரித்திரங்கள் மூலமாகவும் எங்களனுபவத்திலும் கண்டறிந்த உண்மை. இதைநன்கு அறிந்திருந்தும் உண்மையான வழியில் மனத்தைச் செலுத்தாது உதவாதவழியில் ஊக்கம் செலுத்துவது எங்கள் [illegible] பயனேயன்றி வேறல்ல. இறைவனுடைய தியானம் எங்களுடைய இருதயத்தை முற்றாய்க் கொள்ளை கொண்டவுடன், பிறவிகள் தோறும் செய்த பிழைகளெல்லாம் வலியற்று எங்களை வருத்தாதொழியும். ‘சிவனை வணங்கிற் பவமணுகாது’ என்ற ஆன்றோர் வாக்கைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

இடைவிடாது சிவத்தியானம் ஒன்றேயன்றி வேறோர் தியானமுமில்லாதவன் சிவத்தன்மையடைவது நிச்சயம். இத்தன்மை வாய்ந்தவர்களே மற்றவர்களிலும் மேலாகக் கருதப்படுவர். இதன் உண்மையை எங்கள் சமயகுரவர்களதும் பட்டினத்தடிகள் தாயுமானசுவாமிகள் முதலிய புண்ணிய புருஷர்களதும் திவ்விய சரித்திரங்களால் நன்கு விளங்கிக்கொள்ளலாம். சிவத்தியானத்தால் அடையும் பேரின்பத்தை நமது மக்களில் அநேகர் அறிந்திருந்தும், அந்த நிலையை அடைவதற்கு சிறிதும் முயற்சிக்காது அநித்தியப் பொருட்களாகிய மண்ணிலும், பெண்ணிலும், பொன்னிலும் ஆசை வைத்து அவற்றைப் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பதைக் காணுதல் எவ்வளவு பரிதாபமான காரியம். எந்தத் தொழிலைச் செய்யும்பொழுதும் எல்லாம் வல்ல பரம்பொருளை வந்து சிந்தையிலெண்ணி, அதையும் அவருக்கே அர்ப்பணமாகச் செய்தால் அல்லலினின்றும் அகன்று, எம்பெருமானை எய்தல் எளிதாகும். அழியா இன்பமும், அளப்பரும் மனவமைதியும் சொலற்கரும் மனத்தூய்மையும், பகரும் சிறப்புண்மையும் தவறாது கைகூடும்.

ஆதலின் அன்பர்களே! நாமனைவரும் இம்மானிடப் பிறவியின் மகிமையை உணர்ந்து, சிவத்தியானம் ஒன்றே திவ்விய முத்திப்பேற்றுக்குச் சிலம் வாய்ந்ததென்பதைத் திண்ணமாயெண்ணி மண்ணிலும், பெண்ணிலும், பொன்னிலும் மயங்காமல் எங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யுந்தோறும் அகண்டாகார சிவபோகத்தின் அனுபவம் அணையப்பெறுவோம்.

“நின்றும், இருந்தும், கிடந்தும் சிவ[illegible] வா[illegible] வேண்டும். நாமனைவரும் சிவத்தியானமே பேரின்பம் அடைதற்குரிய சிறந்தவழி என்பதை நன்கு உணர்ந்து அந்த வழியைப் பற்றிக்கொள்ளும் வண்ணம் எல்லாம்வல்ல பரம்பொருள் திருவருள் பாலிப்பாராக.

“எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்”

# தரும நெறி

(குகதாசர் ச. சபாரத்தின முதலியார் எழுதிய கட்டுரை)

திரு. சே. வெ, ஜம்புலிங்கம்பிள்ளை உதவியது.

தருமங்களெல்லாம் பல சமயங்களுக்குப் பொதுவானவனவும் ஒவ்வொரு சமயத்திற்கே சிறப்பானவனவுமென இருதிறப்படும். பொதுத் தருமங்கள் பொய்யாமை, கள்ளாமை, கொல்லாமை, வெகுளாமை முதலியனவாகப் பலதிறப்படும். இந்தத் தருமங்களை மேற்கொண்டொழுகுவது மக்கட்பிறவி யெடுத்தார் அனைவருக்கும் இன்றியமையாது வேண்டப்படுவதோர் கட்டுப்பாடாகும். இந்தக் கட்டுப்பாடு கடவுள் உண்மையைக் கைக்கொண்டொழுகும் ஆஸ்திகரால் மாத்திரமல்ல, அவ்வுண்மையைப் புறந்தள்ளொழுகும் நாஸ்திகர் தம்மாலும் அங்கீகரிக்கப்பட்டு வருவதொன்றாம். தரும நெறிகளைக் கைக்கொண்டொழுக வேண்டிய கட்டுப்பாட்டை நாம் நுணுகி ஆராய்ந்து துருவிச் செல்வதுண்டானால் அக் கட்டுப்பாடு கடவுளுண்மை பற்றியெழுந்துளதென்பது விவேகிகளுக்கு இனிது புலப்படும்.

நாம் பொய் பேசாது உண்மையைத் தானே எப்போதும் பேச வேண்டியது எற்றுக்கு? நாம் பிறர் பொருளைக் கவர்தல் கூடாதென்பது எதனால்? நாம் யாதொரு உயிரையும் கொல்லுதல் கூடாதென்பது எதன்பொருட்டு? நாம் கோபம் கொள்வது ஆகாது என்பது எது பற்றி? இப்படியாக இந்தத் தரும நெறிகளைக் குறித்து மேலுமமேலும் விசாரித்துக்கொண்டு செல்லுவோமாயின், இந்தத் தருமங்களுக்கெல்லாம் ஆதாரமாயுள்ள உண்மை எமக்கு வெளிப்பட்டுப் புலப்படும்.

இந்தத் தருமங்களை நாம் அனுசரிக்க வேண்டியதெல்லாம் உலகம் நன்குநடைபெறுதற்கு இன்றியமையாது வேண்டப்படுமென்று இக்காலத்திலுள்ள லௌகிக வாதிகள் கொள்வர். உலகம் நன்கு நடைபெறுதல் வேண்டுமே என்பதைத் தான் நாம் சிந்திக்கவேண்டியது எற்றுக்கு? நமது நயத்தையும் நமது சுகத்தையும் மாத்திரமே நாம் சிந்தித்துப் பிறருடைய நயசுகங்களைப் புறக்கணித் தொழுகின்ற பெறப்படும் இழுக்குஎன்னை? நமது நயத்தின் பொருட்டும் சுகத்தின் பொருட்டும் நாம் விரும்பியவைகளெல்லாம் செய்தலன்றோ நமக்குப்பயன் படத் தக்கது? நாம் விரும்பியவாறு செய்யவொட்டாமல் நம்மைத்தடுத்து வைப்பது நமது சுயேஷ்டைத்தைத் (Liberty) தடுத்தவாறாகு மன்றோ?

அற்றன்று; பிறர்க்குத் தீங்கு விளைதற்குரிய தொன்றை நாம் நமது நயத்தின் பொருட்டுச் செய்வதுண்டாயின், அப்பிறரெல்லாம் திரண்டு நமக்குத் தீங்கு விளைப்பராதலால், அத்தீங்கால் நாம் வருந்தாதபடி நாம் பிறர்க்குத் தீங்கு விளையாமல் இந்தத் தருமங்களை அனுசரித்தல் வேண்டுமென்பாராயின்; பிறரால் எமக்குக் கெடுதி சூழ்வது கூடாததொரு நிலையில் நாம் இருப்பதுண்டானால் இந்தத் தருமங்களை நாம் அனுசரியாமல் எமது இஷ்டப்படி ஒழுகலாமன்றோ?

இங்ஙனமன்று; இக்கருமங்களை நாம் அனுசரியாதொழியின், கடவுளாற் றண்டிக்கப்படுவே மென்பாயின்; இஃது உண்மையேயாகும். ஆகவே, கடவுளொருவர் உண்டென் றுகொண்டாலே நாம் இந்தத் தருமங்களை அனுசரித்தல் வேண்டுமென்றபடியாகும். இன்னும் அப்பாற் செல்வாம்.

இந்தத் தருமங்களை நாம் அனுசரிக்க வேண்டுமென்னுங் கட்டுப்பாட்டைக் கடவுள்தான் எம்மேற் சுமத்திய காரணம் யாதாமோ? கடவுளுக்கு ஆன்மாக்களெல்லாம் புத்திரராகலின் அவருடைய புத்திரர்களுள் ஒருவருக்காவது மற்றொருவர் தீங்கு செய்வது அவருக்குப் பிரீதியாகாதாகலின், அவர் இக் கட்டுப்பாட்டை எம்மேற் பொறித்தாரெனபராயின்; அவர் தம்முடைய பிரீதிப் பொருட்டாக எம்மேல் ஒரு கட்டுப்பாட்டை ஏற்றலாங்கொல்? அரசனொருவன் தன்னுடைய விருப்பத்தின் பொருட்டாக ஓரோர் பிரமாணத்தைத் தனது குடிகளுக்கு விதிப்பானாயின், அவர்கள் அப்பிரமாணத்தை முறையான பிரமாணமென்று கைக்கொள்வாரா? அன்றியும் கடவுள் தம்முடைய புத்திரருட் சிலர் பொருட்டாகப் பிறர்க்கெல்லாம் ஒருபிரமாணத்தை விதிப்பது நீதியாகுமோ? தம்முடைய புத்திரருள் எவருக்காவது தீங்கு விளையாதபடி காக்கவேண்டியது கடவுளுடைய கடன். அவர் தாம் செய்யவேண்டியதொரு அருட்கடன் நிமித்தமாக ஆன்மாக்களுக்கு யாதொரு கட்டுப்பாட்டை விதிப்பது முறையாகாதன்றே!

பின்னை இந்தத் தருமங்கள் நாம் எமக்கோர் கட்டுப்பாடாக அமைத்தமை யாங்ஙனமென்பதை நாம் நுண்ணிதாக ஆராய்வாமெனின், இக்கட்டுப்பாடு எம் பொருட்டாகவே எமக்கு விதிக்கப்பட்ட தென்பது இனிது பெறப்படும். இந்தத் தருமங்களை அனுசரித்தலால் எமக்கு எய்தற்பாலதாகிய பயன் யாதாமோவெனின், அப்பயன் நாமெல்லாம் கடவுளுடைய சொருபத்தையுணர்ந்து, அச் சொருப நிலையைப் படிமுறையாகப் பயின்று, காலாந்தரத்தில் அதனை அனுபவித்தற்குரிய பக்குவத்தை அடைவதேயாகும். கடவுள் உண்மைச் சொருபர். அவருடைய உண்மைச் சொருபத்தை நாம் கைவல்லியப் படுத்துமாறே நாம் எப்போதும் உண்மையைப் பேசி உண்மையிற் பழகுதல் வேண்டுமென்னும் விதி ஏற்படுத்தப்பட்டது. கடவுள் ஒருவருக்கும் தீங்கு புரியாத நன்மை சொருபமுடையவர். இந்தச் சொருபத்தை நாம் கைவல்லியப் படுத்துமாறே நாம் பிறர் பொருளைக் கவராமையும் பிறவுயிருக்கு இன்னா செய்யாமையுமாகிய கள்ளாமை கொல்லாமை விதிக்கப்பட்டன. முத்தியிலே கடவுளுடைய சொருபத்தை அனுபவிப்பதற்கு அந்தச் சொருபத்தை நாம் நாடோறும் பயின்று அந்தச் சொருபமயமானால் தானே அது எமக்குச் சுவைக்கும். அந்தச் சொருபத்தை நாம் பயிலேமெனின் அது எமக்குச் சுவைக்க மாட்டாது. ஆகவே, முத்தியின்பத்தை நாம் அனுபவித்தற்கு இந்தத் தருமங்களை அனுசரிப்பதெல்லாம் அரிச்சுவடி கற்பதுபோலாகும். இந்த உண்மை முத்திநிலையை உள்ளபடி விளக்கிக் காட்டும் சைவசித்தாந்தத்தாலே மாத்திரமே அறியத் தக்கதாம்.

வியாபாரத்திற் கழகு
விளம்பரஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத்தமிழரின் சமயம்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

## சம்ஸ்கிருதத்திற்கும் தமிழிற்குமுள்ள சம்பந்தம்

மேலைத்தேச மொழியாராய்ச்சிக்காரர் தமிழானது சம்ஸ்கிருத வகுப்பைச் சேர்ந்த பாஷைகளுக்கு அந்நியமானதென்னுங் கொள்கையினர். அன்றியும் அப்பாஷையானது உலகத்திலேயே தூயமொழியாகவும் பழமையானதாகவும் அவர்களாலேயே எண்ணப்படுகின்றது. இவ்வபிப்பிராயத்தைக் கொண்டு நமது தற்காலத் தமிழர்களிற் சிலர் சம்ஸ்கிருதத்தை விளக்கக்கருதி பலவிதமான நவீனக் கொள்கைகளைப் புகுத்த முயற்சி செய்கின்றனர். இக்கொள்கைகளெல்லாம் பிராமணத் துவேஷத்தால் உண்டானவையென்று சொல்லற்பாலது.

தமிழ்ப்பாஷையை நன்றாக ஆராய்ந்தால் அதனுடைய தூய அமைப்பும் மேன்மையும் புலனாகும். சம்ஸ்கிருத பாஷைக்குப் பிரத்தியேகமானதென்றும் தெரியவரும். ஆனால் இரண்டு பாஷைகளுக்கும் தொடர்பு மிகுதியாகவுண்டென்பதை எவரும் மறுக்கமுடியாது. இத்தொடர்பு சமயக்கண்கொண்டு பார்த்தாலதான் தெள்ளிதாக விளக்கமுறும். சமயம் பாஷையோடு இணைக்கப்பட்டுள்ளது. பாஷைகளின் பிறப்பையும் ஒன்றொன்றின் தொடர்பையும் ஆராய்வதற்குச் சமயம் பெரிதும் உதவிபுரிகின்றது. யாமெல்லாம் சமயத்தில் நம்பிக்கையுள்ளவர்களாகலின் நமது பாஷையைக் குறித்து யாம் முடிவுகட்டும் கொள்கைகள் நமது சமயத்தோடு முரண்படக்கூடாது. ஆதலால் நமது பாஷைக்கும் சம்ஸ்கிருதத்திற்குமுள்ள தொடர்பை அறியவேண்டுமாயின் நாம் நமது சமயத்தை முதலிலே ஆராயவேண்டும். இவ்விரு பாஷைகளின் உற்பத்தியைப் பற்றியும் தொடர்பைப்பற்றியும் நமது சமயமென்ன சொல்லுகின்றதென்பதை யாம் கண்டுபிடித்தல் வேண்டும். நமது ஞானசாரியர்கள் பழைய கல்விமான்கள் அறிஞர்கள் என்ன சொல்லியுள்ளனரென்பதை அறியவேண்டும். இவர்கள் அபிப்பிராயமே மற்றவைகளிலும் பார்க்க மதிக்கத்தக்கது.

நமது சமயத்தின்படி எல்லாப் பாஷைகளும் நாத தத்துவத்திலிருந்து உண்டானவை. நாத தத்துவத்திலிருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி முதலியவை உண்டானதும், அக்ஷரங்கள் ஓசையிலிருந்து உண்டான விதமும் அக்ஷரங்களின் சேர்க்கையால் பதங்களும், மந்திரங்களும்வார்த்தைகளும் உண்டான வழியும் நமது சமயத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

நமது சமயத்தின்படி, ஆதியில் உண்டான பாஷை சம்ஸ்கிருதமாகும். இதற்குத் தேவபாஷையென்று பெயர் உண்டானதின் காரணம் இது உலக உற்பத்தியில் முதல் தோன்றினவர்களாகிய தேவர்களுக்குக் கொடுக்கப்பட்டமையால் என்ப. இக்காரணத்தினாலேயே நமது சுருதிகளும் அப்பாஷையிலேயே ஏற்பட்டுள்ளன.

முதல்யுகத்திலிருந்த மனிதர்கள் ஞானத்திற் சிறப்புற்றிருந்தவர்களாகலின் இப்பாஷையைச் சிறிதுகாலம் பேசியதாகத் தெரிகிறது. லௌகிக வாழ்வு ஏற்பட ஏற்பட அவர்கள் அப்பாஷையைக் கலப்பில்லாமல் வைக்கக்கூடவில்லை. இதனால் பல பாஷைகள் உண்டாயின. இவை எல்லாம்பாலெனின் கடவுளால் அருளப்பட்ட சமயத்திலிருந்து பல சமயங்கள் பின்னர் உண்டானமை போல் சம்ஸ்கிருதத்திலிருந்து இவைகளும் பாஷைகளும் திருவருட் சகாயத்தைப் பெற்றவையேயென்று சொல்லலாம்:—

பண்டிதர் தங்கள் பதினெட்டுப்
பாடையும்
அண்ட முதலரனான் சொன்ன
வாறே

என்பது திருமந்திரம்.

தமிழ்ப்பாஷை சிவபெருமானால் பாரதவருஷ வாசிகளுக்குச் சிறப்பாகக் கொடுத்தருளப்பட்டது. சம்ஸ்கிருதம் எப்படித் தேவலோகத்திலோனருக்குக் கொடுக்கப்பட்டதோ அஃதேபோலென்னுந் தன்மைத்து.

ஆரியமுந் தமிழுமுடனே
சொலிக்
காரிகை யார்க்குக் கருணை
செய்தானே

தமிழ் தென்மொழியென வழங்கப்படும். தென்னிந்தியாவிலுள்ள சனங்களுக்குரிய பாஷை என்பதால் இப்பெயர் வந்ததன்று. தேவர்கள் வசிக்கும் வடமேருவிற்குத் தென்பக்கத்திலுள்ள பாரதவர்ஷத்திலுள்ள சனங்களுக்கு உரியதாதலால் இப்பெயர் பெறலாயிற்று.

சம்ஸ்கிருதம், தமிழ், ஆகிய இவ்விரு பாஷைகளின் தெய்வீக உற்பத்தி மேலைத்தேசக் கல்வியில் ஈடுபட்டுள்ள நமது பண்டிதர்களுக்கு விநோதமாகத் தோன்றுவது நூதனமன்று. பாஷையானது கடவுளால் கொடுத்தருளப்படுமேயானால் எல்லோருக்கும் பொருந்தக்கூடியதாக ஒரேபாஷையிலிருந்தாற் போதுமே. கடவுள் எல்லாமறிந்தவராகலின், முதல் ஒருபாஷையைத் தந்து பிறகு வேறொரு பாஷையைத் தந்திலர் என்று நினைக்கின்றனர். தெய்வீகச்சக்தியின் தொழிலைச்சிறிதும் அறியாதவர்கள் சமய சம்பந்தமான விஷயங்களைப்பற்றி ஆராய முன்வருவது பெரிதும் வருந்தத்தக்கது. தெய்வீக சக்தியின்றி ஒருபாஷையேனும் உற்பத்தியாகமாட்டாதென்றும் உண்மையை அவர்கள் சிறிதும் உணராதவர்கள். மனிதனுக்கு வேண்டிய பாஷைகளையும் மற்றும் அவசியப் பொருள்களையும் சக்திக்கு ஏற்றவாறு கடவுள் அமைத்தருளுகின்றாரென்பதை அவர்கள் சிந்திக்க வேண்டியது.

சம்ஸ்கிருதத்தைப்போல தமிழும் இறைவனால் கொடுக்கப்பட்டதாம். இவ்விரு பாஷையும் நன்கு கற்பவர்களுக்குத் தமிழும் சம்ஸ்கிருதம் அமைக்கப்பட்ட வழியிலேயே அமைந்திருப்பது தெரியவரும். ஒலி, உற்பத்திமுறை, எழுத்து, பெயரியல், பதவியல், யாப்பியல், பேச்சு, இசை முதலியன ஏறக்குறைய ஒத்திருப்பதைக் காணலாம். இதனால் இருபாஷைகளையும் ஒருவரே ஒரே தன்மையாக உண்டாக்கினரென்பது வெளிப்படை. எல்லாப் பாஷைகளிலும் பரிணமிக்கும் நாத சக்தியை யாம் அனுபவிக்கும்படி கடவுள் இவ்விரு பாஷையையும் நமக்கு அருளினர். பாஷைகளால் மனிதர்களுக்கு ஏற்படும்பயன் சிறிதாயினும் அப்பயனை யாம் அலட்சியம் செய்தல் கூடாது. மந்திரங்களால் யாம் அடையும் பயன் அதிகமென்பதைச் சிந்திக்கவேண்டியது அவசியம். சம்ஸ்கிருதமும் தமிழும் மற்றப் பாஷைகளைவிட சனங்களுக்கு மிகுதியாகப் பயன் அளிப்பனவாம். ஆதலால்தான் அவையிரண்டும் கடவுளால் அருளப்பட்டவையென்று கூறப்படுவது [illegible] தம் நமக்கு ஏற்ற [illegible]

நமது அடியார்களின் வாக்குகளால் நிவர்த்திக்கப்பட்டன. அடியார்கள் உண்மையை உள்ளபடி ஞானத்தால் அறிந்தவர்களாகலின் அவர்கள் சாட்சியத்தை யாம் புறக்கணித்தல் தகாது.

திருஞானசம்பந்தர்

தம்மலரடி யொன்றடியவர் பரவத்
தமிழ்ச் சொலும் வடசொலுந்
தாணிழற்சேர
ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன்
றிகிலா அந்தகர்

அப்பர்

ஆரியந் தமிழோடிசை யானவன்
முத்தமிழு நான்மறையுமானான்
கண்டாய்
வடமொழியுந் தென்மொழியு
மறைகள் நான்கு மானவன்
காண்

திருமூலர்

தமிழ்ச்சொல் வடசொல்லெனு
மிவ்விரண்டும்
உணர்த்துமவனை யுணர்தலுமாமே.

ஆனால் நமது ஆங்கிலங் கற்ற தமிழர்கள் விரும்புவதாவது கடவுள் இவ்வுலக சம்பந்தமான கிளர்ச்சியில் ஒன்றும் தலையிடப்படாதென்பதும் எல்லாம் இயற்கைக்கு விடப்படவேண்டுமென்பதாம். கடவுளுக்கு ஓர் செயலும் கூடாதென்பதும் எல்லாம் இயற்கை முறையில் நடந்தேறவேண்டு மென்பதும் இவர்கள் கோரிக்கையாகும். இனிச் சங்கப் புலவர்கள் தங்கள் காலத்திற் கொண்ட அபிப்பிராயங்களைச் சற்றுக் கவனிப்பாம்.

நாமகள்

நாடாமுதல் நான்மறை நான்முகன்
நாவிற்
பாடாவிடைப் பாரதம் பகர்ந்
தேன்—கூடாமை
எள்ளிய வென்றி யிலங்கிலை வேல்
மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு

வண்ணக்கஞ் சாத்தனார்

ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந்
ததனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரி
தால்—ஆரியம்
வேதமுடைத்து தமிழ் திருவள்
ளுவனார்
ஓதுகுறட்பா வுடைத்து.

மற்றும் பரஞ்சோதிமாமுனிவர் சிவஞானமுனிவர் முதலிய பேரறிஞர்களின் கருத்துகள் என்னவென்பதை ஆராய்வாம். சிவஞானமுனிவர் தமிழர்களாகிய எமக்குப் பேரணிகலம் போன்றவர். சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் ஒருங்கே பாண்டித்தியமுடையவர். சமயத்துறையிலும் இலக்கியத்துறையிலும் இணையற்றவர். அவர் கூறுவதை யாம் ஆதாரமாகக் கொள்ளவேண்டியது அவசியமே. அவர் சொல்லுவதாவது:-

காஞ்சிப்புராணம்

இருமொழிக்குங் கண்ணுதலார்
முதற்குரவர்
வடமொழியைப் பாணினிக்கு
வகுத்தருளியதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலக
மெல்லாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்
லேற்றுப் பாகரெனிற்
கடல் வரைப்பினிதன் பெருமை
யாவரே கணித்தறிவார்

பரஞ்சோதிமாமுனிவர் தமது திருவிளையாடற் புராணத்து நாட்டுப்படலத்திற் கூறுவதாவது:—

விடையுகைத்தவன் பாணினிக் கிலக்
கணம் மேனாள்
வடமொழிக் குரைத் தாங்கியன்
மலயமா முனிக்குத்
திடமுறுத்தியம் மொழிக்கெதிராக்
கிய தென்சொல்
[illegible] வழுதி
[illegible]

## ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி அன்னையார் ஞாபகார்த்த நிதி

இந்நிதிக்கு மேலும் ரூபா 182 கொழும்பு விவேகானந்தசபையாரால் சேர்க்கப்பட்டுச் சென்னையிலுள்ள கமிட்டியின் மாகாண காரியதரிசிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே இதன்பொருட்டு ரூபா 660 சேர்க்கப்பட்டு ஸ்ரீ ராஜகோபாலாசாரியாரவர்கள் கொழும்பிற்கு விஜயம் செய்தபோது அவரிடம் கொடுக்கப்பட்டது.

ஐப்பசி மாதத்தில் வரும் காந்தியடிகளின் அடுத்த ஜன்மதினம்வரை இந்நிதிக்குப் பணம் சேகரிக்கப்படும். பணம் உதவவிரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அதனை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். காரியதரிசி விவேகானந்தசபை, 34 மேட்டுத்தெரு, கொழும்பு.

---

இத்தகைய அத்தாட்சிகளிருப்பவும் தமிழர்களுக்குச் சம்ஸ்கிருதம் சமயத்துறையில் உபயோகப்படுவதில்லையென்று கூறுதல் தகுமோ? நமக்குத் தனியாக ஓர் பாஷை இருந்தபோதிலும் யாம் சமய அனுஷ்டானங்களின் நிமித்தம் சம்ஸ்கிருதத்தை நம்பியுள்ளோம். மந்திரங்களெல்லாம் சம்ஸ்கிருதமாயிருப்பதோடு சமய சம்பந்தமாக யாம் நாள்தோறும் உபயோகிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் சம்ஸ்கிருதமயமாயுள்ளது. ஆரியரோடு யாம் கலக்கு முன்னர் நமக்குச் சமயமும் சமய அனுஷ்டானங்களும் இல்லையென்று சொல்வது கூடாது. அப்படி யாம் சொல்லுவோமேயானால் நமது பழைய நாகரிகத்திற்கும் கூட்டத்திற்குமே இழுக்கைத் தரும். ஆரியத் தொடர்பிற்கு முன்னர் எமக்குச் சமயானுஷ்டானங்கள் இருந்திருக்குமாயின், அவ்வனுஷ்டானங்களைக் குறிக்கத்தக்க தமிழ்ப்பதங்கள் யாவை? கோயில்கள் சம்பந்தமான காரியங்களுக்குரிய தமிழ்ப் பதங்கள் யாவை? விக்கிரகங்கள், செபம், தியானம், சமாதி, நிஷ்டை, சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய சொற்களைக் குறிக்கும் தமிழ்ப் பதங்கள் என்ன? இச்சொற்களுக்கு ஏற்ற தமிழ்ப் பதங்களில்லையென்பதை யறிந்த நம் ஆராய்ச்சியாளர் இவையெல்லாம் தமிழர்களிடம் பூர்வத்திலில்லையென்றும் ஆரியர்களிடமிருந்து பிறகு வந்தவையென்றுங் கூறுவர். நமது பூர்வசமயம் இயற்கை வழிபாடுதானென்றும் நமக்கு சமயானுஷ்டானங்கள் ஒன்றும் இருந்ததில்லையென்றும் நினைக்கின்றனர். நாகரிகமுதிர்ச்சியுற்றிருந்த ஒரு வகுப்பினர் இந்நிலையிலிருப்பாரா? கடவுள் நமக்கு சமயநூலொன்றும் நமது ஆன்மவீட்டுப்பேற்றின் பொருட்டுக் கொடுத்தருளவில்லையென்பது தெய்வ நிந்தனையாகும்.

பௌதிக சாத்திரம் குறித்த எல்லையைக் கடந்து செல்லாது. அதற்கப்பாலுள்ளதைத் தெரிந்து கொள்ளக்கூடாது என்று அச்சாத்திரத் துணிபு. அப்படி அப்பாலுள்ளதையெல்லாம் நமது சமய அறிவால் விளங்கிக் கொள்ளலாம்; இப்படி விளங்கிக்கொள்வதை பௌதிக சாத்திரிகள் குருட்டுப்பத்தியென்றும் அசம்பாவிதமென்றும் கூறுகின்றனர். இவர்களெல்லாம் இவ்வுலகை இயக்கும் சித்தாற்றலொன்றுளதென்பதை உணராதவர்களாவர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக்கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

பற்றி, அவனை வரவேற்று இருக்கச்செய்தான்; வீரசாமி விசுவநாதனைப்பார்த்து "விசுவநாதா,உனக்கு ஏதும் சுகமில்லையா? உன்னை வெகுநாளாக வழிதெருவிற்போக நான் கண்டதில்லை" என்று பரிவுடன் வினவ, "எனக்கு ஒரு சுகவீனமுமில்லை; ஆனாலும் இப்பொழுது சில நாட்களாக நான் வெளியிறபோதல் வருதலை விட்டுவிட்டேன்; வீண்கூட்டங்கூடித் திரிவதால் அவப்பேர் உண்டாகிறது; நான் இப்பொழுது படிப்பதிலும் இன்னும் ஆகவேண்டிய நல்லகருமங்களைப் பார்ப்பதிலுமே காலம் போக்குகிறேன்" என்றான்.

### "வௌவாலார் தின்றகனி வாயாலே, வாயாலே"

"வீராசாமி, ஏதோ காரணமில்லாமல் நீ வரமாட்டாய்; வந்த நோக்கமென்ன? உண்மையைச் சொல்லு" என்று வினவினான் விசுவநாதன்; "வேறொன்றுமல்ல; பாலசிங்கன் இப்பொழுது சுகவீனமாகக் கிடக்கிறான்; உனக்கு அந்தச் செய்தி தெரியாமலிருக்கக்கூடுமென்றெண்ணி இப்பொழுது தெரிவித்துப்போக வந்தேன்" என்று சொன்னான் வீராசாமி; "பாலசிங்கன் சுகவீனமாய்க் கிடந்தால் அது நூதனமல்ல; வௌவாலார் தின்றகனிவாயாலேயென்றுசொல்லுவார்கள் எங்களூரிலே; பாலசிங்கன் செய்த அக்கிரமங்களுக்கு அவன் நோய்வாய்ப்பட்டுக் கிடப்பது நூதனமல்ல" என்று வெறுப்போடு பதில் சொன்னான் விசுவநாதன்; "பாலசிங்கனுக்கு நோய்வருவதற்கு நியாயமுண்டு இல்லையென்ற இவைகளைப்பற்றி உன்னிடஞ் சொல்ல உன்னோடு யோசிக்கநான் வரவில்லை; அவன் உன் பழைய சினேகிதனல்லவா, அதனால் உனக்குத் தெரிவிக்கவேண்டுமென்ற நியாயம்பற்றித்தான் நான் வந்தேன்; உனக்கு இஷ்டமானால் நீ போய்ப் பார்க்கலாம், இல்லையேல் விடலாம்; அது உன்னைப் பொறுத்தது; அவனுடைய சுகவீனத்தை அறிந்துகொண்டும் நான் உனக்குத் தெரிவிக்காமலிருந்தால் பின்னர் அவனைப் பாராமல் விடுதற்கும் என்னைக் குறைகூறுவதற்கும் நீ குற்றமில்லாதவன்போல் நடப்பதற்கும் வசதியாகவிருக்கும்; ஆனதினாற்றான் இப்பொழுது சொல்லிவிட்டேன்" என்று விசுவநாதனுள்ளத்திற் சுடும்படியாக விடை சொன்னான் வீராசாமி. அதனைக் கேட்ட விசுவநாதன் வீராசாமியைப் பார்த்து "நீ சொல்வது சரிதான்; ஆனால் உன்னைநான் குறை சொல்லவில்லை; பாலசிங்கன் ஒரு உற்ற சினேகனல்லன்; அவன் தன்னைநம்பி நடப்பவர்க்குஞ் சதி செய்வான்; அதனால் அவனைப் போய்ப் பார்ப்பதற்கு எனக்கு மனமெழவில்லை; அதுகிடக்க அவனுக்கு என்ன சுகவீனம், அவனுடைய சுகவீனம் ஆபத்தானதா? இல்லையேல் மாறக்கூடியதா? அவன்தான் எனக்குத் தெரிவிக்கும்படி உன்னை இங்கு வரவிட்டானா? இல்லையேல் நீயாகவந்து எனக்கு இதைத் தெரிவிக்கிறாயோ, சொல்லு" என்று விசுவநாதன் ஒன்றன்பின்னொன்றாகப் பல கேள்விகளைக் கேட்டான். "அவனுடைய சுகவீனம் சாய்ச்சலென்றுஞ் சொல்லலாம், கொதியென்றுஞ் சொல்லலாம்; அது ஆபத்தாகவும் வரக்கூடும், ஆபத்தில்லாமலும் போகக்கூடும்; அவனும் உனக்குத் தெரிவிக்கும்படி என்னிடஞ் சொன்னான்; உனக்குத் தெரிவிக்கவேண்டுமென்று நானும் நினைத்து வந்தேன்" என்று சிறிது வேடிக்கையாகவே வீராசாமி பதில் சொல்ல, வெறுப்போடிருந்த விசுவநாதன் அவன் சொன்னவைகளைக் கேட்டுச் சிரித்துக்கொண்டு "என்ன வீராசாமி, விநோதமாகப் பேசுகிறாய், நான் போய் அவனைப் பார்க்கவேண்டுமா, போய்ப்பார்ப்பதும் பாராமல் விடுவதும் உன்னைப் பொறுத்தவை; உன் பிரியப்படி செய் என்பதே நான் சொல்லத்தக்கது; ஆனால் ஒன்று மாத்திரம் சொல்லுகிறேன்; அதனை உங்களிருவருக்கும் முந்தியுஞ் சொல்லியிருக்கிறேன்; நீங்களிருவரும் படித்த மூடர்கள், நான் படியாதமூடன்; ஏனென்று கேட்கிறாயோ? பாலசிங்கன் உனக்கு ஏதும்பிழை செய்திருக்கலாம்; அவன் இந்த நேரத்தில் வருத்தமாய்க் கிடக்கிறான்; அவனைப்போய்ப் பார்ப்பதோ பாராமல் விடுவதோ என்று படியாத மூடனாகிய என்னை நீ கேட்கிறாய்; 'நெல்லுக்கு உமியுண்டு, நீருக்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவுக்குமுண்டு' என்று நீதானே பலமுறையும் முந்தி எனக்குச் சொல்லி வைத்தாய்; உனக்கு சினேகனென்றிருந்தவன் பிழையொன்றிரண்டு செய்தால் நீ அதைப் பொறுப்பதன்றி அவனை ஆபத்தநேரத்தில் அறவே புறக்கணித்துவிடலாமோ? கைவிரல் கண்ணிலே குத்திவிட்டால் அதனைத் தறித்தெறிவாருமுண்டோ; நீங்கள படித்தபடிப்பு புத்தகப்படிப்பு, நான படித்த படிப்பு உலகப்படிப்படா விசுவநாதா" என்று அதட்டி நியாயம் பேசினான் வீராசாமி. "நல்லது, நான் அவனைப் பார்ப்பதற்கு இப்பொழுதே புறப்பட்டு வருகிறேன்; நீயும் உடன் வருகிறாயோ" என்று விசுவநாதன் கேட்க "வரச்சொன்னால் வருகிறேன்" என்றான் வீராசாமி. "நான் அங்கே வந்தால் அதிக நேரம் தங்கியிருக்கமாட்டேன் சற்றுவேளையாற் புறப்பட்டுவிடுவேன்" என்று விசுவநாதன் சொல்ல, "அதைப்பற்றி எனக்கேன் சொல்லுகிறாய்" என்றான் வீராசாமி. உடனே இருவரும் புறப்பட்டு மார்க்கத்திலே நானா வார்த்தைகளையும் பேசிக்கொண்டு பாலசிங்கன் வீட்டையடைந்தனர். அடைந்தவுடனே விசுவநாதன் வீராசாமியைப் பார்த்து "நீ முன்னுக்குப்போ உன்பிறகே நான் வருகிறேன்" எனலும், "நான முன்னுக்குப்போக நீ என்பிறகே வரலாம், இல்லையேல் நீ முன்போக நான பின்னேவரலாம்" என்றான் வீராசாமி; "இல்லை நீதான முன்னுக்குச் செல்; எனக்குக் கூச்சமாயிருக்கிறது, நான உன்பிறகே வருகிறேன்" என்று விசுவநாதன் சொல்ல, அதற்கு உடன்பட்டு வீராசாமி அவனைக் கூட்டிக்கொண்டுபோய்ப் படுக்கையறையிற் கிடந்த பாலசிங்கன முன்னிலையில் விட, அவன் அயலேயுள்ள ஒரு நாற்காலியைக் காட்டி அதில் இருக்கச்சொல்ல, அவன் இருந்தான; இன்னொரு நாற்காலியில் வீராசாமியும் இருந்தான்.

### "ஏன உங்கே நிற்பான்? உள்ளே வாருங்கள்"

பாலசிங்கன் விசுவநாதனைக் கண்டமாத்திரத்தே மெல்ல எழுந்து படுக்கையிற்றானே இருந்தபடி "விசுவநாதா உனக்குநான பெரும பிழை செய்துவிட்டேன; அதையிட்டு நான் இப்பொழுது கவலைப்படலானேன; எனக்கு மனவருத்தமேயொழிய, சரீர வருத்தம் அதிகமில்லை; அந்த மனவருத்தம் [illegible] மதுபானத்தைப் பற்றி நான கனவிலும் நினைக்கமாட்டேன்; நான் உனக்குச் செய்த அபராதங்களைப் பொறுத்துக்கொள்; என்னுடன் சிநேகமாயிருக்காவிட்டாலும் என்னைப் பகைக்கவேண்டாம்" என்று விசுவநாதனுடைய உள்ளமுருகச் சொன்னான். "பாலா, நீ கவலைப்படாதே, மதுபானத்தை நீ விட்டுவிட்டால் உன்னை ஒருபோதும் நான் கைவிடமாட்டேன்" என்று பரிவுடன் சொன்னான் விசுவநாதன். "விசுவநாதா, உன்னைக் கண்டபின் எனக்கு மனவருத்தம் மாறிவிட்டது; தேகவருத்தமுஞ் சுகமாய்விட்டது; ஆனதால் உங்களிருவரோடும் நான் இப்பொழுது மெல்ல மெல்ல வெளியிற்போய் உலாவிவர விரும்புகிறேன், உனக்குச் சம்மதமா" என்று பாலசிங்கன் கேட்க, "ஓம்" என்றான் விசுவநாதன. உடனே மூவரும் புறப்பட்டுக் கடற்கரையை நோக்கிப் போகும்போது, மார்க்கத்தில் ஒரு சிறந்த வீடுகாணப்பட, பாலசிங்கன மற்றை இருவரையும் பார்த்து "சற்று நேரம இப்படி நின்றுகொள்ளுங்கள்; எனக்குச் சிறிது ஆயாசமாயிருக்கிறது; இது எனக்கு வேண்டியவர்களுடைய வீடு, நான்மாத்திரம்போய்த் தாகசாந்தி செய்வேன் இரண்டுநிமிஷத்தில் வருகிறேன்" என்று சொல்ல, அவர்களும் அதற்குச் சம்மதித்து அவ்வீட்டு வாசலுக்கெதிரே தெருவோரத்தில் நிற்க, பாலசிங்கன் மாத்திரம் உள்ளே புகுந்தான். இருவரும் ஐந்து நிமிஷம்வரையில் அந்த இடத்திற்றானே நின்றார்கள்; பாலசிங்கன்வரவில்லை; "இது யாருடையவீடு உனக்குத்தெரியுமா" என்றுவிசுவநாதன் வீராசாமியை வினவ, "எனக்குத் தெரியாது, ஒருபோது இவனுடைய இனத்தவர்களின் வீடாயிருக்கக்கூடுமென நினைக்கிறேன்" என்றான் வீராசாமி; இப்படிப் பதில்சொல்லி முடிவதற்கிடையில் ஒரு வேலைக்காரச்சிறுமி அவ்விருவருமிருக்குமிடத்திற்கு வந்து "உங்களை உள்ளே வரும்படி அந்த ஐயா சொல்லச் சொன்னார்" என்று தெரிவிக்க, வீராசாமி முன்போக விசுவநாதன் யோசித்தபடி பின்னே சென்றான்; இருவரும் போய்த் தலைவாசலில் ஏறி நின்றனர்; நிற்பதற்கிடையில் தலைவாசலுக்கு நேரேயுள்ள அறையின் வாசலில் இடப்பட்ட அலங்காரத் திரையைத் தன் மெல்லிய கரத்தால் சற்று ஒதுக்கிப் பற்றியபடி பூரண சந்திரனைப்போன்ற முகத்தோடு கூடிய ஒரு இளமபெண் "ஏன் உங்கே நிற்பான? உள்ளே வாருங்கள்" என்று குயிலென மொழிந்து அழைக்க, இருவரும் உள்ளே சென்றார்கள.

—வரும

## பிரிட்டன்மீது பறக்கும் வெடிகுண்டுகள்

லண்டன் யூலை 24—

நேற்று முன்தினம் இரவும் நேற்றுப் பிற்பகலும் லண்டன் உள்பட தென் இங்கிலாந்தின் மீது ஜெர்மானியர் பறக்கும் வெடிகுண்டுகளை ஏவியதின் பயனாக ஆள்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டதென்று விமானப்படை மந்திரி காரியாலய அறிக்கை கூறுகிறது.

### திருத்திக்கொள்க.

[முந்தியபிரசுரத்தில் (13-7-44) வெளிவந்த உலகமபலவிதக்கதையில், இரண்டாமபந்தியில் "வேறொரு மாப்பிள்ளையைப்பேசி யொழுங்குபண்ணலாமென்றால் அதற்கும் உடன்படலாமே" என்றிருப்பதை "அதற்கும் உடன்படாளாமே" எனவும், 5-ம்பக்கத்தில் இரண்டாமபந்தியில் "உன்னைக் காட்டிலும் அந்தப்பாலசிங்கன் எனக்குநல்லவன்" என்றிருப்பதை "அந்த விசுவநாதன் எனக்கு நல்லவன்" எனவும் திருத்திக்கொள்க.]

## ஒருபுலவரின் பிரிவு

"கல்லடி வேலுப்பிள்ளை" என வழங்கிய திரு. க. வேற்பிள்ளையென்னுஞ்சிறந்தபுலவர் இந்தயூலாய் மாசம் 20உ வியாழக்கிழமை இவ்வுலகவாழ்வையொருவினார்; இத்தமிழ் நாட்டிலும் சிங்கப்பூர் மலாய்நாட்டிலும் இப்புலவரை நேரில் அறியாதார், இவரைப்பற்றிக் கேள்விப்படாதார் சிலரினுஞ் சிலரேயாவர். இவரும் வசுகவிகளுள் ஒருவராக வைத்தெண்ணப்படத் தக்கவர். இவர் உடனுக்குடன் இயற்றும் பாக்கள் ஆசிகாசஞ் செறிந்துள்ளவை; சிலேடையானவை, இலகுவாக விளங்கத்தக்கன; இசைப்பாட்டன்றி வசைப்பாட்டும் இவருக்குக் காளமேகப் புலவர்போற் கைவந்துள்ளன. கவி பாடுவதில் மாத்திரமன்றிப் பிரசங்கஞ் செய்வதிலும் விவாதஞ் செய்வதிலும் இவர் நிபுணரெனலாம். இனி, எழுத்து விஷயத்திலும இவர் திறமையுடையவரெனபது இவர் பலவருடங்களாக நடத்திய சுதேச நாட்டியமெனனும் பத்திரிகையைக் கொண்டும, காலத்தோறும் எழுதி வெளியிட்ட கண்டனப் பத்திரிகைகளைக் கொண்டும் அறியலாகும். இப்புலவர் முருகக் கடவுளைத் தமக்கு உபாசனா மூர்த்தியாகக் கொண்டுளாரெனபது அப்பெருமான் மீது பாடிய சில தோத்திரபாக்களால் அறியலாகும்; இவர் சாதியபிமானம பாஷையபிமானமென்னுமிவற்றோடு சமயாபிமானம் பெரிதுமுடையவர், சைவ சமயத்திற்கு மாறாக யாரும்பேசினால, எழுதினால இவர் மனம் பொறாது அவர்களைக் கண்டித்துப் பேசியும் எழுதியும் வந்துள்ளவர். எஞ்சியிருந்த பழைய புலவராகிய இப்பெரியாரை யாழ்ப்பாண நங்கை இழந்து சோகமுறாமலிருத்தல் முடியாது; இவரது பிரிவால் வருந்தும் இவர் பிள்ளைகளாகிய திருவாளர்கள்: பிறக்டர் நடராசா, சுப்பிரமணியம், சாரங்கபாணி, இரத்தின சபாபதி என்னும் இவர்களோடு நாமும அநுதாபப்படுகிறோம். இவர் ஆன்மா சாந்தியடைவதாக.

## புகையிலைவியாபாரம்

இலங்கைச் சுருட்டு வர்த்தகசங்க நிர்வாகசபைக்கூட்டமொன்று சென்றபுதன் கிழமைசாயந்தரம் சங்கக்காரியாலயத்தில் கூடிற்று. அத்தருணம் பல பிரபலசுருட்டுவியாபாரிகள் சமூகம் அளித்தனர். கூட்டத்திலே கீழ்காணும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானம் பின்வருமாறு;—

தம்பங்கடவைப்புகையிலையை மாமூலாக ஒரு தூலாம் புகையிலை இருபத்தெட்டு இறுத்தல் கொண்டதாகக் கட்டி விற்று வந்தார்கள் இக்காரணத்தினால் சுருட்டுவியாபாரம் நல்லநிலையை அடைந்தது. இப்பொழுது தம்பங்கடவைப் புகையிலையையும்மற்றப்புகையிலைகளையும் வாங்குபவர்கள் இறுத்தல்கணக்கில் புகையிலையை மதித்து வாங்கும்படிக்கு ஆச்சங்கம் அவர்களைக்கேட்டுக்கொள்ளுகிறது.

### கண்டுபிடித்துக் கொடுப்பவருக்குத் தக்க சந்மானம்

13 வயதுள்ள ஜேன் அல்லது சொபியா சஞ்சி (Jane alias Sophia Sanchi) என்னும் வேலைக்காரச் சிறுமி காணப்படவில்லை. அவள் சிறிது பருமனும், கறுப்பு நிறமும், சாதாரண உயரமும் உடையவள். கண்டு பிடித்து அறிவிப்பவர்களுக்குத் தக்க சன்மானம் வழங்கப்படும்.

ஸ்ரீமதி. R. கந்தையா,
"கற்பக வில்லா"
கோப்பாய்.

Mis 82, 27.7.44.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெர்மனியில் மூன்று ராஜ்யங்கள்

## உலக அமைதி ஏற்பட சம்னர்வெல்ஸ் கூறும் வழி

வாஷிங்டன் யூலை 25—
மாஜி அமெரிக்க அயல்நாட்டு மந்திரி திரு. ஸம்னர்வெல்ஸ் எழுதிய "தீர்மானத்திற்குத் தருணம்" என்ற புத்தகம் ஜெர்மனியை மூன்று பாகங்களாகப் பிளக்கவேண்டும் என்றும் போலந்துக்கு கிழக்கு பிரஷ்யாவைக் கொடுக்கவேண்டுமென்றும் வருங்காலத்தில் ஜெர்மன் அபாயத்தைத் தடுக்க ஒரே வழி இதுதானென்றும் வற்புறுத்துகிறது.

"பேர்ல் ஹார்பர் சம்பவம் நடக்கும் மூன்று மாதங்களுக்கு முன்பு வரையில ஜப்பானுக்கு எண்ணெய் இரும்பு ஏற்றுமதியை அமெரிக்கா அனுமதித்ததற்குக் காரணம் எதுவென்றால் சாத்யமான கடைசி நிமிஷம்வரையில ஜப்பானுடன் யுத்தத்தைத் தவிர்க்க ராஜதந்திர முறைகளை அனுஷ்டிக்கவேண்டுமென்று அமெரிக்க ராணுவ கடற்படை பிரதம அதிகாரிகள் வற்புறுத்தியதே" என்று திரு வெல்ஸ் விளக்குகிறார். அவர் ரூஸ்வெல்டின் அயல்நாட்டுக் கொள்கை ஆலோசகர்களின் குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டுகிறார். ஆனால் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை.

யுத்தம் பிற்கால ஜெர்மனியைக் குறித்து திரு. வெல்ஸின் யோசனைகள் பின்வருமாறு:—

1 தென் ஜெர்மனியில் ஒரு புதிய ராஜ்யம் ஸ்தாபிக்கவேண்டும். அந்த ராஜ்யத்தில் பவேரியா வுயர்ட்டெம்பேர்க பாடன் ஹெஸ்ஸி டார்மஸ்டட் ரைன்லந்து ஸார் இவை அடங்கியிருக்கவேண்டும். இப்பிரதேசங்களில் பெரும்பாலோர் கத்தோலிக்கரென்பது குறிப்பிடத்தக்கதாகும்,

2 பழைய ஜெர்மன் சப் டிவிஷன்களான அப்பர் ஹெஸ்ஸி டுரிங்ஜியா வெஸ்ட்டலியா ஹனோவர் ஓல்டென்பர்க் ஹாம்பர்க் இவை அடங்கிய இரண்டாவது ராஜ்யம ஸ்தாபிக்கப்படவேண்டும்.

3 கிழக்கு பிரஷ்யா இல்லாமல் பிரஷ்யா மெக்லென்பர்க் ஸாக்ஸனி இவை அடங்கியதாக இருக்கவேண்டும். மூன்றாவது ராஜ்யம டான்ஜிக் டினியா இவ்விரண்டும் போலந்திடமிருக்கவேண்டும்.

# கொழும்பு விவேகானந்த சபை

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை

நிகழும் தாரண வருஷம் ஆடிமீ 13-ம் திகதி (28-7-44) வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு, சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை மேட்டுத் தெருவிலுள்ள விவேகானந்தசபை மண்டபத்தில் மேற்படி சபையாரால் கொண்டாடப்படும். அத்தருணம் பிரமஸ்ரீ சா, அப்புக் குருக்களவர்களும், முது தமிழ்ப்புலவர் மு. நல்லதம்பியவர்களும் பேசுவார்கள். திரு. ஆ. க. தம்பிமுத்து அவர்கள் தோத்திர பாராயணம் செய்வாரென அறிகின்றோம்.

நிகழும் தாரண வருஷம் ஆடிமீ 14-ந் திகதி (29-7-44) சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை வெள்ளவத்தை 34ம் வீதியிலுள்ள சைவ மங்கையர்கழக மண்டபத்தில் கொண்டாடப்படும். அத்தருணம் ஸ்ரீமத் விபுலானந்த சுவாமிகள் தலைமை வகிப்பார், திரு. வி. செல்வநாயகமவர்கள் M. A., பிரமஸ்ரீ கி. இலக்குமண ஐயர் B. A. முதலியோர் பிரசங்கங்களை ஆற்றுவார்கள் என்றும்.

# யானையிறவு அரசினர் பாடசாலைச்

## சுகாதாரவார விழாவும், பெற்றோர் தினக் கொண்டாட்டமும்

ஷை பாடசாலை மண்டபத்தில், 23-7-44 காலை 9 மணிவரையில், கரைச்சிப்பகுதிக் கிராமச்சங்கத் தலைவரும், பதிவுக் காரியஸ்தருமாகிய திரு. க. நடராசா அவர்களின் (Village Committee Chairman and Registrar of Karachchi Division) அவைத் தலைமையின் கீழ் (Kilinochchi Sanitary Inspector) கிளிநொச்சி சுகாதார பரிசோதகர் திரு. C, கதிர்காமசுவாமியவர்களினதும், ஷை பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. C. கந்தையா அவர்களினதும் பெருமுயற்சியின் பெறுபேறாக, சுகாதாரவார நிகழ்ச்சிகளும் பெற்றோர் தின விழாவும் ஆரம்பமாயின.

(D. M. O. Kilinochchi) கிளிநொச்சி வைத்திய பகுதித் தலைவர் திரு. R. அருணாசலமவர்கள் 'மலேரியாச் சுரம்' என்னும் விடயம்பற்றி அரியவோர் சொற்பொழிவாற்றினர்.

இப்பகுதிக் கிராம விதானையார் திருகை. வேலுப்பிள்ளை அவர்கள் 'கெட்ட கிருமிகள் நீருட் கிடப்பதால், சுட்டாறிய நீரே சுகத்துக்கேற்றது' என்பது பற்றிச் சிறந்தவோ ருபந்நியாசஞ் செய்தனர்.

தலைமையாசிரியர் 'தொற்றுநோய்கள் பற்றியும் உணவுப்பொருள் விருத்தியில் பெற்றோர் ஆசிரியர் மாணவர் எவ்வெவ்வித தீவிர முயற்சிகள் செய்யவேண்டுமென்றும், கூட்டுப்பசளைச் செய்கை முறைகளை யொட்டியும் இச்சிறு பாடசாலை யுத்தசேமிப்பு இயக்கத்தின் பேரால் இக்காலவரை எண்பத்துநாலு ரூபாவைச் (84) சேமித்த பெருமையைப் பிடிகையாகக் கொண்டும் சபையோருக்கு அறிவுரை பகர்ந்தனர்.

சுகாதாரப்பாக்கள், நடிப்புகள், சம்பாஷணைகள் முதலிய நிகழ்ச்சிகள் மூலம் ஷை பாடசாலை மாணவர் சபையோரை இன்புறுத்தினர்.

சுகாதாரப் பரிசோதகர் அவர்கள் 'மாணவரும் சுகாதாரக் கடமைகளும்' என்னும் சிறந்த விடயம் பற்றியும் பெற்றோர் ஆசிரியர் சுகாதாரத்தை மேலோங்கச் செய்வதற்குக் கட்டாயமாகத் துணைபுரியவேண்டுமென்பது பற்றியும் மிகச் சிறப்பான குறிப்புரைகளைக் கூறினர்.

தலைவரவர்களின் சீரிய குறிப்புரைகளின் பின்னர் தலைமையாசிரியரவர்கள் சுகாதார பரிசோதகரவர்களின் தளரா ஊக்கத்தையும் ஏனைய உபந்நியாசகர்களின் சிறப்பியல்களையும் பற்றி நன்றியுரை கூறியதும், சிற்றுண்டி தேநீர் வழங்கப்பட்டு ஷை விழாக்கள் நிறைவேற்றப்பட்டன. —நிருபர்.

# இலவச பால் ஊட்டல் நிலையம்

இந்தமாசம் 15-ந் திகதி 3-30 மணிக்குச் சுகாதாரப் பரிசோதகர் சி. சண்முகம்பிள்ளை அவர்களின் முயற்சியாக பிற்றிக்கலையில் அமுககொடை என்னுங் கிராமத்தில் சிறு பிள்ளைகளுக்கு இலவச பால்ஊட்டல் நிலையம உடுகம அரசாங்க அங்கத்தவர் டைசமன் அபயவிக்கிரம அவர்களால திறக்கப்பட்டது.

இந்நிலையம் பிற்றிக்கலைச் சுகாதார சபையின காரியதரிசி சி. சண்முகம்பிள்ளை அவர்களின் வேண்டுகோளின நிமித்தம ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையம 24 ஸ்திரீகள அடங்கிய ஓர் நிர்வாக சபைமூலம் நடத்தப்படும்.

பிற்றிக்கலைப்பகுதியில் சுகாதார வாரக்கொண்டாட்டம் இந்த மாசம் 23- திகதி அரசாங்க அங்கத்தவர் டைசமன் அபயவிக்கிரம அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

( † இசைத்தட்டு )

### வெள்ளி யூலை 28

காலை: 7-45 கீதாரம்பம் 7–50 தமிழில் செய்திகள் 8 திரை இசை† 8·15 ஆங்கிலத்தில் செய்திகள் 8 30 டி கே லக்ஷ்மணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1–40 டி கே லக்ஷ்மணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 எம் ஜி நாகோஜிராவ்பாட்டு 5-40 குரான்ஷரீப் 5 வி கங்காதரம் பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7.15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 காப்பிய மகளிர் நாடகம் 8 வி கங்காதரம்பிள்ளை நாகஸ்வரம் 8-45 எம் ஜி நாகோஜிராவ் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் லண்டன் அஞ்சல் 10 இசைவேளை† 10-30 முடிவு:

### சனி யூலை 29

காலை: 7-45 கீதாரம்பம் 7-50தமிழில் செய்திகள் 8 கே எஸ் நாராயண ஐயங்கார் கோட்டுவாத்தியம்† 8–15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 காலை இசை† 9 முடிவு.

1 டி எஸ் வெங்கடாசலம்பிள்ளை வயலின் 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கதம்பம்† 2 தமிழில் செய்திகள் 2 05 டி கே நடராஜபாகவதர் பாட்டு 2-30 முடிவு.

மாலை: 5 டி எஸ் வெங்கடாலம்பிள்ளை வயலின் 5-40 திருமந்திரவிளக்கம் 6 டி கே நடராஜ பாகவதர் பாட்டு 6:30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 எந்தவழி பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 9-15 மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தலரூபா 10 இசைவேளை† 10-30 முடிவு.

### ஞாயிறு யூலை 30

காலை: 7-45கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 நடனகீதம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8·30 இசைக்கதம்பம் 9 முடிவு.

12 கதம்பம்† 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வி ஏ ஞானம்பாள் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 இசைவகை† 2-30 முடிவு.

மாலை: 5 வி ஏ ஞானம்பாள் வீணை 5-40 தேவாரார்த்தனை 6 டி எஸ் பகவதி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 சமது தபாற்பெட்டி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 டி என் மாணிக்கம் பாட்டு 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பள்ளுப்பாட்டு 10 இசைவேளை† 10-30 முடிவு.

# ஹிட்லர்மேசையில் குண்டு வைக்கப்பட்டது

ஸ்டோக்ஹோம் பத்திரிகையான 'டோஜன்ஸ் நைஹட்டரின்' பெர்லின் நிருபர் கூறுவதாவது:-

ஹிட்லரைக்கொல்ல முயற்சித்தவர்கள் அவருடைய மேஜைக்கு மேலேயே அந்த வெடிகுண்டை வைத்தனரென்றும் அது தட்டையான ஒரு நூதன வெடிகுண்டாக இருந்ததால் கடுதாசிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டதாம். அறையின மத்தியில ஹிட்லர் இருந்தும்போது வெடிகுண்டு வெடித்தது. இதனால அவருடைய வலது புஜம காயமடைந்தது. வலது கையும இடது கையும தலையணையின பக்கமுள்ள மயிர்களும் எரிந்துவிட்டனவாம.

# நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவம்

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் வருடாந்தத் திருவிழாக் காரணமாக 1944ம் ஆண்டு ஆகஸ்டு மாசம் 3ம் திகதி தொடக்கம் 19ம் திகதி முடிய தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8மணி வரையும் கோயில் வீதிகளாகிய யாழ்ப்பாணம் பருத்தித்துறைத் தெருப்பக்கம், பழைய சந்தைத் தெருப்பக்கம் என்னுமிவை மார்க்கமாகப் போகும் எவ்வகை வண்டிகளும் அப்பாதைகளை ஒழித்து, உவைமன்தெரு, நாவாந்துறை வீதி நல்லூர் 1ம் நம்பர்க் குறுக்குத்தெரு என்னும் இவைகள் மூலமாகவே போக்குவரவுசெய்யவேண்டு மென்று இதனால் எவர்க்கும் பிரசித்தஞ் செய்யப்படுகின்றது.

S W O டி சில்வா
வடமாகாணப் பொலிஸ் தலைவர்

பொலிஸ்தானம்
யாழ்ப்பாணம், 18-7-44
Mis 80 27&31-7 44;

### திங்கள் ஜூலை 31

காலை: 7-45கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 டாக்கி இசை† 8·15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஆர் சோமசுந்தரம் நாகஸ்வரம் 9 முடிவு.

1 இசைவேளை† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் பி ரங்கசாமிபிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.06 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 ஆர் சோமசுந்தரம் பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 என் பி ரங்கசாமிபிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 கே எஸ் வெங்கடராமய்யா வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9·45குழல் குரல் இசை 10 இசைவேளை 10-20 'பாஷன்' படப்பாடல்கள் 10-30 முடிவு.

உங்கள் கண்கள் விலையுயர்ந்தவை
உங்கள் கண்ணாடிகளைக் கீழ்க்காணும்
பிரசித்திபெற்ற கம்பெனியில்
வாங்குங்கள்!
**வீனஸ் ஒப்ரிக்கல் கம்பெனி**
28, மெயின் ஸ்ட்ரீட், யாழ்ப்பாணம்.
Mis 60 31—7—44&.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday. 27, July, 1944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org